முருகப்பெருமான் துணை

# மகான் ஜெயமுனிவர் அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.02.2024**, வெள்ளிக்கிழமை

1. மண்ணுலகை ஞானவழி நடத்த
மாதவசியாக வந்த அரங்கா
சண்முகனார் உன்னுள் இறங்கி
சரவணச் சுடரேற்றி அருள
2. அருள சுப்பிரமண்யர் ஞானம்
அனைவரும் அடைந்து உயர
பேருலகில் வழிகாட்டும் தேசிகா
பிரணவக் குடில் ஆசான் உன் பெருமை கூறி
3. கூறியே சோபகிருது சால் திங்கள்
குறைவிலா லாப திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 11 ம் நாள், 23.02.2024, வெள்ளிக்கிழமை)
அறிவிப்பேன் துல்லிய ஆசி
அரங்கன் கேட்க ஜெயமுனிவர் யானும்
4. யானுரைக்க பிரணவக் குடில்
உயிர்காத்து உயர்வளிக்கும்
ஞானக்குடிலாகும் என்பேன்
ஞானிகள் பூசை நடத்தும் முழுமதியில்
5. முழுமதியில் ஞானியர் கூட்டங்கள்
முழுமைதரும் ஞானம் அருள
வழுவாமல் பூசை கலந்து
வழங்கும் அருளமுதை உண்டு
6. உண்டுமே சைவ நெறிதனை
உயர்வாய் ஏற்றுத் தொடர
கண்டுவரும் கருமவினைகள்
கரைந்தோடி நன்மை கிட்டும்
7. கிட்டுமே தான் என்ற ஆணவ
குறைகள் யாவும் நீங்கி
தட்டாமல் அனைவரும் சமம்
தலைவன் முருகப்பெருமானே எனும்

8. எனும் தெளிவு திடம் கூடி
எல்லா வகையும் தேடி அலையா
ஞான தேசிகன் காட்டுகின்ற
நம்பிக்கையான வழிமுறை ஏற்று
9. ஏற்றுமே அரங்க மகானிடம்
இணையிலா திருவடி தீட்சை
ஆற்றல் பெருக அடைந்து
ஆசானே தலைவனே என அடிபணிந்து
10. அடிபணிந்து அரங்கன் புகழை
அகிலமெல்லாம் கொண்டு செல்ல
தேடியே ஞானிகள் மகாசக்திகள்
தெய்வங்கள் அனைவரும் சேர்ந்து
11. சேர்ந்துமே வேலவன் ஆசிபட
செயலாக சேவையாகத் தேற்றி
நேர்ந்து ஞான சபை கொண்டே
நிலவுலகில் ஞான ஆட்சிபடைப்பர்
துல்லிய ஆசி முற்றே

—சுபம்—